**8.4.2015**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோடைக் காலம்: எலுமிச்சம்பழம் ரூ.10</u>**

கோடைக் காலம் துவங்கியுள்ள நிலையில், வெள்ளக்கோவிலில் எலுமிச்சம் பழம் ரூ. 10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஈரோடு, சேலம், புதுக்கோட்டை மாவட்டங்களில் அதிகளவு எலுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது. அப்பகுதிகளிலிருந்து எலுமிச்சம் பழங்கள் பிற இடங்களுக்கு விற்பனைக்கு வருகிறது. தற்போது, எலுமிச்சம் பழங்களின் வரத்துக் குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இரண்டு வாரத்துக்கு முன் அதிகபட்ச விலை கிலோ ரூ. 80 ஆக இருந்தது. தற்போது ரூ. 160 ஆக உள்ளது. இந்நிலையில், வெள்ளக்கோவில் மார்க்கெட்டில் பழக்கடைகள், காய்கறிக் கடைகள், சாலையோரக் கடைகளில் ஒரு பெரிய எலுமிச்சம் பழம் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**<u>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் 245 குவிண்டால் பருத்தி ரூ.9.30 லட்சத்துக்கு ஏலம்</u>**

எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மறைமுக ஏல விற்பனையில் 245 குவிண்டால் பருத்தி ரூ. 9.30 லட்சத்துக்கு விற்பனையானது. இந்திய பருத்திக் கழகம் மூலம் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 44 விவசாயிகள் 245 குவிண்டால் எடை கொண்ட 695 பருத்தி மூட்ட யை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இந்த ஏல விற்பனையில் பங்கேற்ற பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பருத்தி வியாபாரிகள், பருத்தியின் தரத்தை சோதித்து, தங்களின் கொள்முதல் விலையை இந்திய

பருத்திக் கழக அலுவலர்களிடம் தெரிவித்தனர். அதிக விலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, விவசாயிகளின் அனுமதியுடன் பருத்தி விற்பனை செய்யப்பட்டது. அதன்படி, நீண்ட இழை பருத்தி குவிண்டால் ஒன்று ரூ.3,300 முதல் ரூ. 4,129 வரையும், மிக நீண்ட இழை பருத்தி குவிண்டால் ஒன்று ரூ. 3,889 முதல் ரூ. 4,041 வரையும் என மொத்தம் 245 குவிண்டால் பருத்தியானது ரூ. 9.30 லட்சத்துக்கு விற்பனையானது. மேலும்,பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்த பருத்தியை நிழலில் உலர வைத்து 8 சத ஈரப் பதத்துடன் சுத்தப்படுத்தி கொண்டு வரும் பட்சத்தில், விவசாயிகளின் பருத்திக்கு உரிய விலை கிடைக்கும் என்றனர் வேளாண் துறையினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெல்லையில் பலத்த மழை**

நெல்லை : நெல்லை மாவட்டத்தில் இன்று அதிகாலை பரவலாக கனமழை பெய்தது. இதனால் கடந்த சில நாட்களாக கோடை வெப்பத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த நெல்லை மாவட்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அதிக லாபம் தரும் சாமந்தி பயிரிட விடையூர் விவசாயிகள் ஆர்வம்**

விடையூர்: விடையூர் பகுதியில், அதிக லாபம் தரும், சாமந்தி பூவை, விவசாயி கள் ஆர்வத்துடன், பயிரிட்டு வருகின்றனர். கடம்பத்துார் அடுத்த, விடையூர் பகுதியில், பூ வகைகளை பயிரிடு வதில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏற்கனவே, மல்லிகை, கனகாம்பரம், முல்லை, ரோஜா போன்ற பூக்களை பயிரிட்டு வந்த விவசாயி கள், தற்போது குறுகிய காலத்தில், அதிக லாபம் தரக்கூடிய, சாமந்தி பூவை

பயிரிடுவதில், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகை யில், "ஒரு ஏக்கர் சாமந்தி பூ பயிரிடுவதற்கு 35 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. செடி வளர்ந்து பூ வந்ததும், மூன்று நாளுக்கு ஒருமுறை, 50 - 75 கிலோ வரை பூ பறிக்கலாம்" என்றார். மேலும், 'சந்தையில் குறைந்தபட்சம், ஒரு கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனை ஆனால், எங்களுக்கு மூன்று மாத காலத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். இதனால், எங்கள் பகுதி யில் தற்போது, 50 ஏக்கர் வரை சாமந்தி பூ பயிரிட்டு வருகிறோம்' என்றார்.

**<u>கறவை மாட்டுக்கு பால் காய்ச்சல்கட்டுப்படுத்த அதிகாரி யோசனை</u>**

ஈரோடு:கறவை மாடுகளுக்கு, பால் காய்ச்சல் வருவதை தடுக்க, முன் எச்சரிக்கையோடு கட்டுபடுத்துவது அவசியம், என, கால்நடை துறை பேராசிரியர் தெரிவித்துள்ளார். கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் டாக்டர் யசோதை கூறியதாவது:பால் காய்ச்சல் குறைபாடு, கறவை மாடுகள் கன்று ஈனும் போது வரும். சுண்ணாம்பு சத்து குறைபாடே, இந்நோய் வர காரணம். கன்று ஈன்ற, 48 மணி நேரத்துக்குள் மாடுகளுக்கு இந்த பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது. சில நேரங்களில் இது மாறுபடும். இதனால் தசை நார்கள் செயலற்ற நிலைமை செல்லும். மாடு படுத்த படுக்கையில் இருந்து எழமுடியாத நிலைக்கு தள்ளப்படும். ஐந்து முதல், 10 வயது பால் தரும் கறவை மாடுகளையே, இது அதிகம் பாதிக்கிறது. இதில், மூன்று நிலை உள்ளது.கன்று ஈன்ற, 10 நாட்களில் காய்ச்சல் வரலாம். நோய் பாதித்த மாடு, சிறிது நேரம் அதிர்ச்சி, பதட்டத்துடன் காணப்படும். தலை, கால் தசைகளில் நடுக்கம் இருக்கும். இருந்த இடத்தை விட்டு நகராது. தீவனம் உண்ணாது. நாக்கை வெளியே தொங்கவிட்டு காணப்படும். பால் கறவை நின்று விடும்.அடுத்த நிலையில் உள்ள மாடு, கழுத்தை மடித்து வைத்துக் கொள்ளும். மூக்கு உலர்ந்து விடும். கண்களில் மிரட்சி ஏற்படும். கண்கள்

நீல நிறமாக இருக்கும். அசைபோடுதல் நின்று விடும். உடல் குளிர்ந்து விடும். சிறுநீர் கழிக்காது. மூன்றாம் நிலையில், மாடு பக்கவாட்டில் படுத்து, தலையை தரையில் கீழே வைத்துக் கொள்ளும். மயக்க நிலையில் இருக்கும். இந்நிலையில் சிகிச்சை அளிக்க தாமதமானால், உயிரிழப்பு ஏற்படும். நாடி, இதய துடிப்பும் உணரவோ, கேட்கவோ முடியாது. இதனை ஆரம்ப நிலையிலே தடுக்க வேண்டும். இதற்கு கால்நடை டாக்டர் உதவியோடு, கால்சியம் போரோ குளுக்கோனேட் மருந்தை ரத்தத்தில் செலுத்த வேண்டும். தினமும், 30 கிராம் தாது உப்பு கல வை கொடுத்தால், பிரச்னை இருக்காது. கன்று ஈன்ற பிறகு மாட்டுக்கு, தெளிந்த சுண்ணாம்பு நீரை தினமும் அரை லிட்டர் குடிநீரில் கலந்து கொடுக்கலாம். வைட்டமின் "டி' மருந்தை, 20 அல்லது, 30 மில்லி யூனிட் அளவில் ஊசி மூலம் செலுத்தினால், பால் காய்ச்சல் வராமல் தடுக்கலாம், என்றார்.

## நுங்கு விற்பனை அமோகம்; சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் பல இடங்களில் நுங்கு விற்பனை அமோகமாக நடந்து வருவதால், சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் சுவைத்துச் செல்கின்றனர். நீலகிரி மாவட்ட சுற்றுலா மையங்களை கண்டுக்களிக்க, ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தொடர் விடுமுறையின் இறுதி நாளான நேற்று, வழக்கத்தை விட, சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. கோடை வெயிலின் உக்கிரம், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், கோத்தகிரி வழித்தடத்தில் நுங்கு விற்பனை களைக்கட்டியுள்ளது. கோத்தகிரி எல்லையான குஞ்சப்பணை, அரவேனு, கோத்தகிரி, பாண்டியன் பார்க் மற்றும் கட்டபெட்டு உட்பட, ஊட்டி, குன்னூர் வழித்தடம் முழுவதும் நுங்கு வியாபாரிகள் காணப்படுகின்றனர். பயணக் களைப்பில் வரும் சுற்றுலா பயணிகள், நுங்கை வாங்கி ருசித்துச்

செல்கின்றனர். நுங்குடன், பதநீர் விற்பனையும் களைகட்டியுள்ளதால், நுங்கு வியாபாரிகள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதற்கென நாள் தோறும் சம ெவளி பகுதிகளில் இருந்து லாரிகளின் மூலம் நுங்கு கொண்டுவரப்பட்டு பல்வேறு பகுதிகளுக்கும் 'சப்ளை' செய்யப்படுகிறது.

## <u>மாமரங்களில் பிஞ்சுகள் வெம்புவதால் மகசூல் பாதிப்பு! மாம்பழத்தின் விலை உயர வாய்ப்பு</u>

செஞ்சி : கடும் வெயிலினால் மாமரங்களில் இருந்து பிஞ்சுகள் அதிக அளவில் கொட்டி வருவதால் மாம்பழங்கள் விளைச்சல் குறைந்திருப் பதுடன், விலையும் உயர்ந்துள்ளது. வழக்கமாக மாம்பழ சீசன் ஏப்ரல் மாதத்தில் துவங்கி அடுத்த நான்கு மாதம் வரை சீசன் இருக்கும். இந்த ஆண்டு மாம்பழ சீசன் தற்போது துவங்கி உள்ளது. சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மாவட்டங்களில் மாவிளைச்சல் அமோகமாக இருக்கும்.இதற்கடுத்தபடியாக விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி, அப்பம்பட்டு, ஊரணித்தாங்கல், நீலாம்பூண்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மாம்பழ சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த நான்கு ஆண்டுகளில் மழையின் அளவு குறைந்ததால் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஏராளமான மாமரங்கள் பட்டு போயின. இதனால் புதிதாக மாந்தோப்புகளை உருவாக்குவதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.இதனால் மாம்பழங்கள் வரத்து இந்த ஆண்டு குறையும் நிலை இருந்தது. மாம்பழங்களுக்கு மேலும் சோதனையாக வெயில் வாட்டி எடுத்து வருகிறது. வழக்கமாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பூத்து குலுங்கும் மாமரங்கள், மார்ச் மாதத்தில் பிஞ்சுகளாக காய்த்து தொங்கும். ஏப்ரல் துவங்கியதும் சீசன் துவங்கும்.பிஞ்சுவிடும் மார்ச் மாதத்திலேயே இந்த ஆண்டு கோடை வெப்பம் தாக்க துவங்கியது. மழையின்றி காய்ந்து கிடந்த மாமரங்கள் இந்த வெப்பத்தை தாங்க முடியாமல் பிஞ்சுகள் வெம்பி கொட்ட துவங்கின. வழக்கமாக மாமரங்களில் 10 முதல் 15 சதவீதம் பிஞ்சுகள் வெம்பி கீழே விழுவது

வழக்கம்.இந்த ஆண்டு 30 முதல் 40 சதவீதம் வரை மாம்பிஞ்சுகள் வெம்பி கீழே கொட்டி விட்டன. இதனால் மாம்பழங்களின் வரத்து இந்தாண்டு குறைவாக இருப்பதுடன், விலை உயரும் நிலை உள்ளது. ஏற்கனவே மழை இல்லாமல் மாமரங்களில் காய்கள் குறைந்து விட்ட நிலையில், பிஞ்சும் கொட்டி வருவதால் மகசூல் குறையும் நிலை உள்ளது.வழக்கமாக மழை மங்கும் காலத்தில் மாங்காயும், மழை பொங்கும் காலத்தில் புளியும் விளையும் என்பார்கள். தொடர்ந்து மழை மங்கியதால் இந்த கூற்றையும் பொய்யாக்கி மாம்பழ விளைச்சல் இந்த ஆண்டு வெகுவாக குறைந்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மாம்பழ விளைச்சல் இருப் பதால், வழக்கமாக வெளியூர்களில் இருந்து மாம்பழம் கொள்முதல் செய்து கொண்டு வரப்படுவதில்லை.இந்தாண்டு விழுப்புரம் மாவட்டத்தில் மாம்பழ விளைச்சல் குறைந்துள்ளதால், வெளி மாவட்டங்களில் இருந்து கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் மாம்பழத்தின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## எள் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு எள் வரத்து அதிகரித்துள்ளது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு வடதொரசலூர், நாகலூர், விருகாவூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 350 எள் மூட்டைகளை, நேற்று விற்பனைக்காக கொண்டு வந்தனர். அதிகபட்சமாக 5,498 ரூபாய், குறைந்தபட்சமாக 4,999 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.இதேபோல் நேற்று 200 மக்காசோள மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக 1,327 ரூபாய், குறைந்தபட்சமாக 1,289 ரூபாய்க்கும் விலை போனது. மணிலா 20 மூட்டைகள் அதிகபட்சம் 5,199 ரூபாய், குறைந்தபட்சமாக 1,289 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று 22.5 லட்சம் ரூபாய் மதிப்பிலான விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

## கோமாரி தடுப்பு முகாம்

சங்கராபுரம் : சங்கராபுரம் பகுதியில் 23 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. கள்ளக்குறிச்சி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் குபேந்திரன் உத்தரவின்பேரில் சங்கராபுரம் ஒன்றியத்தில் கோமாரி நோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. ஒன்றியத்தில் உள்ள 44 வருவாய் கிராமம் மற்றும் குக் கிராமங்களில் கோமாரி நோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப் பட்டது.கால்நடை மருத்துவர்கள் சுகுமார், கார்த்திகேயன் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் செந்தில்முருகன், கந்தன் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் குழுக்களாக சென்று, 23 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட்டனர்.

## விவசாய கழிவுகளை தூளாக்கும்: கருவி: விவசாயிகள் விண்ணப்பிப்பு

தேனி: விவசாய கழிவுகளை தூளாக்கும் "ஸ்பிரட்டர்" என்ற கருவி வேண்டும் என விவசாயிகள் விண்ணப்பித்து வருகின்றனர். விவசாய கழிவுகளான தென்னை மட்டை, சோகை, முருங்கை கிளைகள், சோள தட்டைகள் போன்றவை மண்ணில் மக்கி உரமாக நீண்ட காலம் பிடிக்கிறது. தவிர இவற்றை உரமாக மாற்றாவிட்டால் வீணாக எரித்து அழிக்க வேண்டி உள்ளது. இதனால் பணியாளர்கள் செலவும் கூடுகிறது. இப்பிரச்னைக்கு தீர்வாக இது போன்ற கழிவுகளை தூளாக்கும் கருவி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவாக விலை உள்ள இந்த கருவி டிராக்டருடன் இணைந்து செயல்படுகிறது. கருவியை டிராக்டரில் இணைத்து விட்டு, உள்ளே மட்டைகள், கட்டைகள், உட்பட விசாய கழிவுகள் எதை செலுத்தினாலும் அவற்றை அரைத்து தூளாக்கி வெளியே தள்ளி விடுகிறது.கழிவுகள் எளிதில் மக்கி மண் வளத்தை பெருக்குகிறது. இந்த கருவியை பயன்படுத்துவதால் பணியாளர்கள் செலவும் குறைவு என்பதால் விவசாயிகள் மத்தியில் இக்கருவிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த கருவியை தங்களுக்கு மானிய

விலையில் வழங்க வேண்டும் என கேட்டு அதிக அளவில் விவசாயிகள் விவசாய பொறியியல் துறையிடம் விண்ணப்பித்துள்ளனர்.

**தாமரை வடிவில் தக்காளி**

தலைவாசல் தலைவாசல் அருகே, விவசாய தோட்டத்தில் சாகுபடி செய்திருந்த தக்காளி பழம், "தாமரை' பூ வடிவத்தில், விளைந்திருந்ததால், அப்பகுதி மக்கள் வியப்புடன் பார்த்து சென்றனர்.சேலம் மாவட்டம், தலைவாசல் அடுத்த வேப்பநத்தம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ராஜகோபால், அவரது, விவசாய தோட்டத்தில், தக்காளி சாகுபடி செய்துள்ளார். இதில், நேற்று, தக்காளி பழங்களை அறுவடை செய்த போது, சில தக்காளி பழங்கள், இந்தியாவின் தேசிய மலரான, "தாமரை' பூ வடிவத்தில் இருந்தது. மகிழ்ச்சியடைந்த அவர், அந்த தக்காளி பழங்களை பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருந்தார். அதையறிந்த அப்பகுதி மக்கள், வியப்புடன் பார்த்து சென்றனர்.

**மேட்டூர் அணையில் வண்டல் மண் அகற்றினால்20 சதவீதம் கூடுதலாக தண்ணீர் தேக்க வாய்ப்பு**

மேட்டூர்:மேட்டூர் அணையில், நேற்று, பின் பருவகால ஆய்வு மேற்கொண்ட, பொதுப்பணித்துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் அசோகன் கூறியதாவது: டெல்டா மாவட்டங்களில் ஏரி, கால்வாய்களை தூர்வார கடந்த ஆண்டு, 30.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பாண்டுக்கு அரசு விரைவில் நிதி ஒதுக்கும். காவிரி-சரபங்கா நதி நீர் இணைப்பு ஆய்வுக்காக, மேலும் ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளது.மேகதாதுவில் கர்நாடகா அணை கட்டினால், தமிழகத்துக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து, தமிழக முதல்வர் மத்திய நீர் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். மேலும், 2014-15ம் ஆண்டில் மேட்டூர் அணைக்கு, 200.12 டி.எம்.சி., நீர் கிடைத்துள்ளது. இதில், பாசனம், குடிநீர், தொழிற்சாலை தேவைக்கு, 171.09 டி.எம்.சி., நீர் திறக்கப் பட்டுள்ளது.தமிழகத்தில், 740 கோடி ரூபாய் செலவில், 108 அணைகள்

புனரமைப்பு செய்யப்படுகிறது. முதல்கட்டமாக, 11 அணைகளில், பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. மேலும், 11 அணைகள் புனரமைப்புக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. மீதமுள்ள அணைகளில் அடுத்தடுத்து பணி நடக்கும்.மேலும், மேட்டூர் அணை, அமராவதி, வைகை, பேச்சிபாறை, ஸ்ரீவைகுண்டம் ஆகிய அணைகளில் வண்டல் மண் அகற்றுவதற்கு தேவையான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு, 7.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேப்காஸ் என்ற நிறுவனம் அதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனம், வரும் மே,11ம் தேதிக்கு முன் அறிக்கை சமர்பிக்க வேண்டும்.இதில், மேட்டூர் அணையில், 32 கி.மீ., பரப்பளவு நீர்பரப்பு பகுதியில் வண்டல் மண் இருந்தால், விவசாயிகளுக்கும் விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேட்டூர் அணையை தூர்வாரினால், தற்போது தேக்குவதை விட, 20 சதவீதம் கூடுதலாக நீர்தேக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.ஆய்வின் போது, மேட்டூர் அணை செயற்பொறியாளர் சுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர் வசந்தன் மற்றும் கால்வாய், கட்டிட பிரிவு பொறியாளர்கள் உடன் இருந்தனர்.

## ரூ.1.10 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம், :நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 1.10 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத் தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப் பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர்.மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து, மஞ்சளை வாங்கிச் செல்கின்றனர்.

நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 2,106 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10 ஆயிரத்து, 299க்கும், குறைந்த பட்சம், 8,060 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம், அதிக பட்சம், 8,589க்கும், குறைந்த பட்சம், 6,950 ரூபாய்க்கும் ஏலம் போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 22 ஆயிரத்து, 299க்கும், குறைந்த பட்சம், 10 ஆயிரத்து, 399 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தகில், 2,106 மூட்டை மஞ்சள், 1.10 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.

**விவசாயி குடும்பத்துக்கு ரூ.6 லட்சம்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: கார்மோதி பலியான சேத்தூர் விவசாயி குடும்பத்திற்கு ரூ.6 லட்சம் நஷ்டஈடு வழங்க ஸ்ரீவில்லிபுத்தூர்கோர்ட் உத்தரவிட்டது. சேத்தூரை சேர்ந்தவர் தேவன். கடந்த 2010 டிசம்பர் 5 ல் காமராஜர் நகர் அருகே செல்லும்போது கார் மோதி பலியானார். தேவனின் மனைவி பூமதி,47, மகள்கள் குட்டியம்மாள், கண்ணம்மாள்,குருவுராணி, மகன் குமார் ஆகியோர் ரூ.7 லட்சம் நஷ்டஈடு கேட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். "தேவனின் குடும்பத்திற்கு ரூ.6 லட்சத்து 3 ஆயிரம் நஷ்டஈடு வழங்க, எர்ணாகுளம் யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்திற்கு,"நீதிபதி கோவிந்தராஜன் உத்தரவிட்டார்.

**வறண்ட பூமியில் சந்தன மரம்**



வறண்ட பூமியான சிவகங்கையில் சொட்டு நீர் பாசனம் மூலம் சந்தன மரங்களை வளர்த்து வருகிறார் நாட்டரசன்கோட்டை விவசாயி செல்வம். அவர் கூறியதாவது: நாட்டரசன்கோட்டை அருகே மாங்காட்டுப்பட்டியில்

10 ஏக்கரில் பரிட்சார்த்தமாக சந்தன மரம் நடும் முயற்சியில் இறங்கினேன். வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள மாவட்டமாக இருப்பதால்,தண்ணீரின்றி விவசாயம் செய்வது கடினம். இருப்பினும் சொட்டு நீர் பாசனம் மூலம் சந்தன மரங்களை வளர்த்து வருகிறேன். கடந்த 6 ஆண்டுக்கு முன் ஏக்கருக்கு 300 சந்தன மரக்கன்று வீதம் 3,000 கன்றுகளை நடவு செய்தேன். பெங்களூருவில் இருந்து ஒரு கன்று ரூ.150க்கு வாங்கினேன். 2 ஆண்டு நன்கு பராமரித்து, வளர்ந்த பின் முறையாக தண்ணீர் விட்டும், பூச்சி தாக்காமல் மருந்து தெளித்தால் போதும். 15 முதல் 20 ஆண்டு கழித்து வருவாய்துறை அனுமதியுடன் மரங்கள் வெட்டலாம். வளர்ந்த மரங்களில் 30 சதவீதத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும். எஞ்சிய மரங்களை நாமே விற்கலாம். மலைப்பிரதேசங்களில் மட்டுமே வளரும் சந்தன மரங்களை வறண்ட சிவகங்கையில் வளர்க்கும் நோக்கில் வளர்க்கிறேன். சந்தன மரங்களை அரியானா, அருணாச்சல பிரதேசத்திற்கு அனுப்பி, அங்கு சந்தன தைலம் தயாரிப்பர். அன்றைய அரசு விலை நிர்ணயப்படி பல லட்சம் வருவாய் கிடைக்கும், என்றார். ஆலோசனைக்கு 94424 52330.**என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>




E.M. திறன்மிகு நுண்ணுயிரி: Effective Micro Organisms சாதாரணமாக பஞ்ச கவ்யத்தில் (ஐம்மருந்து) பத்து வகை நுண்ணுயிர்கள் என்றால் E.M.ல் எண்பது வகை நுண்ணுயிர்களைத் தேர்வு செய்து அதை ஒருங்கிணைத்த ஒரு நுண்ணுயிர் கலவை ஆகும். இது திரவ வடிவத்தில் உள்ளது. இந்த திறன்மிகு நுண்ணுயிர் கலவையின் நோக்கம் சுற்றுச்சூழலை பாதுகாப்பது, மகசூல் அதிகரிப்பது, பூச்சிநோய்

கட்டுப்பாடு, மண்ணின் வளத்தை அதிகரிப்பது, நுண்ணுயிர்களின் செயல்பாட்டை அதிகரிப்பது மற்றும் பயிர் வளர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் ஊக்குவிப்பது. உM சுத்தமான ஒரு இயற்கை பொருள் வேளாண்மை, கால்நடை, மீன்வளம், கழிவு நீர் பராமரிப்பு, குப்பை கூழங்கள் பராமரிப்பு போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது. விதை நேர்த்தி செய்வதால் முளைப்புத்திறன் கூடுகிறது. கருகல், வேர் அழுகல், இலைப்புள்ளி போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துகிறது. பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. வறட்சியின் போதும், அதிக மழை பெய்யும் போதும் பயிர்கள் தாக்குபிடிக்கும் செலவு குறைவு. மகசூல் அதிகரிப்பு, தரம் மேம்படும் விவசாயிகளுக்கு செலவு குறையும். திருச்சி வானொலி உழவர் சங்க சேவை மையத்தில் அதிகமாக விற்பனை யாகிறது. தொடர்புக்கு: ரகுபதி, ஆசிரியர், வானொலி உழவர் சங்கம், நெ.16 முதல் மாடி, சித்தன் காம்ப்ளக்ஸ், சத்திரம் பஸ் நிலையம், திருச்சி-2. அலுவலக தொலைபேசி : 0431-271 6891, அலைபேசி : 98424 81580 கோதுமை கோ.டபிள்யூ 3: தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, சேலம், கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் இந்த கோதுமையைப் பயிரிடலாம். குறுகிய கால வயதுடைய இந்த வளர்ப்பு 95-100 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியது. குளிர்க்காலத்தில் பருவமழை அதிக அளவில் இல்லாத போது உழவர்களுக்கு இந்த இரகம் ஒரு மாற்று பயிராக அமையும். இதன் சராசரி தானிய மகசூல் எக்டருக்கு 4070 கிலோ. பல்வேறு துரு நோய்களுக்கான எதிர்ப்புத் திறனையும், தரமான தானிய பண்புகளை சீர்தூக்கி பார்த்து இந்த ரொட்டி கோ.டபிள்யூ 3 ரகம் தமிழ்நாட்டின் வேளாண் பெருமக்களின் நன்மை கருதி வெளியிடப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு : 0422 - 661 1215 இயக்குநர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003.

கொம்பு அவரை: (நாட்டு ரகம், நீல அவரை) வயது 6 மாதம் அனுபவ விவசாயி பழனியப்பன், கார்கூடல்பட்டி, அலைபேசி : 96261 77355. கடந்த ஆண்டு ஐப்பசியில் விதைத்துள்ளார். பொங்கலுக்கு காய் வந்து விட்டதாம். புரட்டாசியில் ஊன்றினாலும் பிப்ரவரியில் காய் வந்துள்ளது. 15 நாள் இடைவெளியில் "பவர்ஜிம்' தெளித்துள்ளார். செடி தளதள வென்று வர ஆரம்பிச்சுச்சுள்ளது என்கிறார் விவசாயி. எப்பவும் கொம்பு அவரைக்கு ரூ.4-5 அதிகமாக விலை போகிறது. குறைந்த பட்சம் கிலோ ரூ.20 முதல் அதிகபட்சம் ரூ.60-90 வரை போகுதாம். மேலும் விபரங் களுக்கு ஜெகன், செல்: 98652 04567; அஞ்சன் அலைபேசி : 96555 55166. பவர் ஜிம்: கிரீன் ஹவுஸ் ஆர்கானிக்ஸ் வழங்கும் எல்லா பயிர்களுக்கும் ஏற்ற தரமான இடுபொருள் தயாரிப்பு மற்றும் வினியோகம் ""கிரீன் ஹவுஸ் ஆர்கானிக்ஸ், 9/204, மெயின் ரோடு, பேளுக்குறிச்சி அஞ்சல், நாமக்கல் மாவட்டம். அலைபேசி : 96555 55166, 98652 04567. ஆண்டவர் அக்ரோ சென்டர், திண்டுக்கல் 98946 13088, அக்ரம் அக்ரோ-கோபி, ஈரோடு; 98427 88355.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

***<u>கீரை சாகுபடியில் சாதிக்கும் விவசாயி</u>***



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேல்மங்கலத்தை சேர்ந்த விவசாயி கட்டத் தேவன், 10 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு கீரை செடிகளை வளர்த்து அதிக லாபம் ஈட்டி வருகிறார். இவர் 60 சென்ட் நிலத்தில் வெந்தயக்கீரை, மிளகு தக்காளி கீரை, அரைக்கீரை, பருப்பு கீரை, சிறுகீரை, சிவப்பு பொன்னாங்கண்ணிக் கீரை, அகத்திக்கீரை என பல வகை கீரைகளை சாகுபடி செய்துள்ளார். நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால் ஆறு மாதம் முதல் ஓராண்டு வரை இதன் பயனை அனுபவிக்க

முடியும். வியாபாரிகள் தோட்டத்திற்கு வந்து வாங்கிச்செல்கின்றனர். ஒரு கிலோ ரூ.10 வரை விலை கிடைக்கிறது. ஒரு முறை அறுவடை செய்துவிட்டால் மீண்டும் 10 நாட்களுக்கு பிறகு தான் மீண்டும் அறுவடை செய்யமுடியும். கீரைகள் நல்ல முறையில் வளர்ந்து பலன் தரவேண்டும் என்றால் உவர்ப்பு தன்மை உள்ள நீரை பயன்படுத்த வேண்டும். ஆண்டிற்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. நெல், வாழை, கரும்பு என பணப்பயிர்களை பயிரிட்டு நீர் பற்றாக்குறை மற்றும் நோய் தாக்குதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் இவர் மகிழ்ச்சியாக விவசாயம் செய்து வருகிறார். விவசாயி கட்டத்தேவன் கூறியதாவது: எனக்கு சொந்தமான விவசாய கிணற்றில் கிடைக்கும் நீர் உவர்ப்பு தன்மை கொண்டதாக உள்ளது. இதனால் காய்கறி மற்றும் இதர பயிர்களை சாகுபடி செய்தால் பலன் கிடைக்காது. இதனால் கீரை சாகுபடியில் ஈடுபட்டேன், என்றார். தொடர்புக்கு 99445 23405.-**டி.முத்துக்காமாட்சி, தேவதானப்பட்டி.**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோதுமை உற்பத்தி 5 சதவீதம் வரை குறையும்: மத்திய அமைச்சர் தகவல்</u>**



புதுடெல்லி: மத்திய விவசாயத்துறை அமைச்சர் ராதா மோகன்சிங் புதுடெல்லியில் ஒரு கருத்தரங்கில் பேசுகையில், ''நடப்பு ஆண்டுக்கான கோதுமை உற்பத்தி மதிப் பீட்டை பல்வேறு மாநிலங்கள் அனுப்பி யுள்ளன. இதன்படி இந்த ஆண்டில் கோதுமை உற்பத்தி 4 முதல் 5 சதவீதம் வரை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்றார். கோதுமை உற்பத்தியில் இந்தியா உலகில் 2வது இடத்தில் உள்ளது.

கடந்த பிப்ரவரியில் வேளாண் அமைச்சகம் நடப்பு ஆண்டுக்கான கோதுமை உற்பத்தி 95.76 மில்லியன் டன் என கணித்திருந்தது. பருவம் தப்பி பெய்த மழையால் கோதுமை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, ஆஸ்திரேலியாவில் இருந்து 80 ஆயிரம் டன் கோதுமை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

**சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து விற்பனை செய்யுங்கள் அதிக வருமானம் பெற விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிக வருமானம் பெற சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து விற்பனை செய்யுமாறு வேளாண்மை அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) கி.ராஜேந்திரன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் கடந்த 17 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை ஆய்வு செய்துள்ளது. ஆய்வுகளின் அடிப்படையில் தரமான சின்னவெங்காயத்தின் விலை ஏப்ரல், மே மாதங்களில் கிலோவுக்கு ரூ.22 முதல் 25 வரை இருக்கும் என கணித்துள்ளது. தற்போது திண்டுக்கல், திருச்சி, மதுரை சந்தைகளில் சின்னவெங்காய வரத்து அதிகரித்து காணப்படுகிறது. தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களில் ஒரே சமயத்தில் (பிப்ரவரி, ஏப்ரல் மாதங்களில்) சின்னவெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. தமிழகத்தில் தற்சமயம் சின்ன வெங்காயம் கிலோவுக்கு ரூ.14 முதல் 19 வரை விற்பனை செய்யப்படுகிறது. இலங்கை அரசு உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு இறக்குமதி வரியை அதிகரித்து இந்தியாவின் ஏற்றுமதியை குறைத்துள்ளது. இதனால் சின்ன வெங்காயத்தின் விலை மே மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.எனவே திருவண்ணாமலை மாவட்டத்தில்

உள்ள விவசாயிகள் சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து மே, ஜூன் மாதங்களில் விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**<u>மாரியம்மன் பண்டிகையையொட்டி உழவர் சந்தைகளில் ஒரே மாதத்தில் ரூ.14.20 லட்சம் காய்கறி விற்பனை</u>**

ஈரோடு, : உள்ளூர் பண்டிகையையொட்டி ஈரோடு மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் கடந்த ஒரே மாதத்தில் ரூ.14.20 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனையாகியுள்ளது.விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகிறது. இந்த உழவர் சந்தைகளில் காய்கறிகளின் விலையும் குறைவாக இருப்பதால் நுகர்வோர்கள் அதிக அளவில உழவர் சந்தைக்கு வந்து காய்கறிகள் வாங்கிச் செல்கிறார்கள். பண்டிகை காலங்களில் உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை அதிகரிக்கும். கடந்த மாதம் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மாரியம்மன்கோயில் திருவிழாக்கள் நடந்ததால் உழவர் சந்தைகளில் காய்கறிகள் விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் ஈரோடு சம்பத்நகர் உழவர்சந்தையில் 21 டன் காய்கறிகள் 4 லட்சத்து 62 ஆயிரத்து 130 ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 173 விவசாயிகளும், 3 ஆயிரத்து 420 நுகர்வோர்களும் பயன் பெற்றுள்ளனர். பெரியார்நகர் உழவர்சந்தையில் 6 டன் காய்கறிகள் ரூ.1.35 லட்சத்திற்கு விற்பனையானது. இதில் 58 விவசாயிகளும், 1,240 நுகர்வோர்களும் பயனடைந்துள்ளனர். கோபி உழவர்சந்தையில் 5.350 டன் காய்கறிகள் 87 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 44 விவசாயிகளும், 885 நுகர்வோர்களும் பயனடைந்துள்ளனர். சத்தியமங்கலம் உழவர் சந்தையில் 5.785 டன் காய்கறிகள் 1.19 லட்சம் ரூபாய்க்கு விற்பனை யாகியுள்ளது. இதில் 57 விவசாயிகளும், 850 நுகர்வோர்களும் பயன் பெற்றுள்ளனர். பெருந்துறை உழவர்சந்தையில் 3.330 டன் காய்கறிகள்

67 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 16 விவசாயிகளும், 669 நுகர்வோர்களும் பயனடைந்துள்ளனர். தாராபுரம் உழவர்சந்தையில் 20.130 டன் காய்கறிகள் 3.84 லட்ச ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 139 விவசாயிகளும், 2,800 நுகர்வோர்களும் பயனடைந்துள்ளனர். காங்கயம் உழவர்சந்தையில் 7.900 டன் காய்கறிகள் 1.64 லட்ச ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 59 விவசாயிகளும், 1,590 நுகர்வோர்களும் பயனடைந்துள்ளனர். வெளி மார்க்கெட்டை விட உழவர்சந்தைகளில் காய்கறி விலை குறைவு என்பதாலும், உள்ளூர் பண்டிகையையொட்டியும் உழவர்சந்தைகளில் விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில் மட்டுமே 14 லட்சத்து 20 ஆயிரத்து 130 ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனையாகியுள்ளது.

## <u>கரும்பு பயிரில் அதிக மகசூல் பெற களை கட்டுப்பாடு அவசியம்</u>

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் அதிக மகசூல் பெற களை கட்டுப்பாடு அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு பயிரில் களைச்செடிகளால் பயிருக்கு 3 சதவீத சேதாரம். பூச்சி களால் 20 சதவீத சேதாரம். நோய் கிருமிகளால் 26 சதவீத சேதாரம். எலிக ளால் 6 சதவீத சேதாரம் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. களைகள் பயிருக்கு தேவையான சத்துக்களை எடுத்து கொள்வதுடன் பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகள் தங்கும் இடமாக இருந்து விடுகிறது. பொதுவாக கரும்பில் 5 வகையான களைகள் தென்படுகிறது. புல்வகை, அகன்ற இலை வகை, கோரை வகை, ஒட்டுண்ணி வகை மற்றும் கொடிவகை களைகள் கரும்பு பயிரில் சேதம் ஏற்படுத்துகிறது. இதை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த களை நிர்வாகம் கையாள வேண்டும். ஒருங்கிணைந்த களை நிர்வாகம் என்பது உழவியல், பயிர் சுழற்சி, பண்ணை கருவிகள் மற்றும் பண்ணை எந்திரங்கள் பயன்படுத்தி களை எடுத் தல், களைக்

கொல்லி மரு ந்து பயன்படுத்தி களை களை கட்டுப்படுத்துதல் மற்றும் உயிரியல் மூலம் சூழ்நிலைக்கேற்றவாறு ஒருங்கிணைந்து களைகளை கட்டுப்படுத்துவதாகும். உழவியல் முறை என்பது கோடை உழவு மூலம் கட்டுப்படுத்துவது, வரப்புகளை சுத்தமாக வைத்திருத்தல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், ஊடுபயிர் செய்தல், பயிர் சுழற்சி, சொட்டுநீர் பாசன முறைகளை பின்பற்றி நீர் பாய்ச்சுதல் மூலமாக களைகளை கட்டுப்படுத்தலாம். களைக்கொத்து, மண்வெட்டி, களை உருளும் கருவி, ஜூனியர் கலப்பை, பண்ணை எந்திரங்களாகிய மினி டிராக்டர், பவர் டில்லர், களை எடுக்கும் எந்திரம் மூலம் களை எடுக்கும்போது போதுமான இடைவெளி கொடுக்க வேண்டும். களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்தும்போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தேர்திறன் உள்ள களைக்கொல்லி, தேர்திறன் அற்ற களைக்கொல்லி என இரு வகையான களைக்கொல்லிகள் உள்ளன. தேர்திறன் களைக்கொல்லி என்பது பயிரை பாதிக்காமல் பயிரிடையே வள ரும் களைகளை மட்டும் அழிக்கக்கூடியதாகும். கரும்பில் அகன்ற இலை அல்லது பூண்டுவகை களை கள் அதிகம் காணப்படும் இடங்களில் அட்ரசின் என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் கரும்புக்கரனை விதைத்த 3வது நாள் தெளி த்து களையை வளர விடா மல் தடுக்க வேண்டும். அட் ரசின் தெளித்தபின் அரு குகோரை போன்ற களை கள் தென்பட்டால் தேர்தி றன் அற்ற களைக்கொல்லியான க்ளைச்சோபெட் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் கலந்து அத் துடன் 20 கிராம் அமோ னியம் சல்பேட் உரத்தை கலந்து கைத்தெளிப்பான் கொண்டு களைகள் மீது மட்டும் படுமாறு தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்கிற போது மருந்து தெளித்த 15 நாட்கள் முதல் 20 நாட்களில் கோரைக்கிழங்கு மற்றும் அருகம்புல்லின் வேர்த்தண்டு காய்ந்து அழிந்துவிடும். எந்த களைக்கொல்லி பயன்படுத்தி னாலும் மண்ணில் ஓரளவு ஈரம் இருக்க வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த களை நிர்வாகத்தை கையாளும்போது கரும்பு பயிரில்

அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் பெரிய சாமி தெரிவித்துள்ளார்.

**<u>நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை காப்பது எப்படி?</u>**

பொன்னமராவதி, : கோடை காலத்தில் பல்வேறு நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை காப்பது எப்படி? என்பது குறித்து பொன்னமராவதி வட்டார விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார விவசாயிகளை அட்மா திட்டத்தின் கீழ், தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு கற்றறிவு பயணமாக அழைத்துச்செல்ல வேளாண் துறை யினர் பரிந்துரைத்தனர். அதன் படி, பொன்னமராவதி வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டம் (அட்மா) மூலம் 20 விவசாயிகள் கற்றறிவு பயணத்துக்காகத் தேர்வு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, அவர்கள் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி தலைமையில் பயணம் மேற்கொண்டனர். இந்த கற்றறிவு பயணத்தை வேளாண் உதவி இயக்குநர் ஜெய பாலன் துவக்கிவைத்தார். ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் உஷா வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு குறித்தும், டாக்டர் பூபதி கறவை பசு மற்றும் எருமை மாடுகள் பராமரிப்பு குறித்தும், டாக்டர் ரவி வெண்பன்றி வளர்ப்பு முறைகள் குறித்தும் விளக்கிக் கூறினர். இதனைத் தொடர்ந்து, டாக்டர் ரிச்சர்டு கோழி உற்பத்தி முறைகள் பற்றியும், டாக்டர் செந்தில்குமார் தீவனப் பயிர்கள் உற்பத்தி மற்றும் மேலாண்மை பற்றியும் விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும், கால்நடைகளைத் தாக்குதம் பல்வேறு நோய்கள் குறித்து, அவற்றின் தாக்குதலில் இருந்து மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள் மற்றும் நோய்த் தாக்கினால்

செய்யவேண்டிய சிகிச்சை முறை குறித்து விளக்கமாகக் கூறி பயிற்சி அளித்தார்.இந்த கற்றறிவு பயணத்தில் கண்டியாநத்தம் மற்றும் நெருஞ்சிக்குடி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர். கற்றறிவு பயணத்துக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் குமாரசாமி மற்றும் அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜீ, பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>மானாவாரி மாற்றுப்பயிராக குதிரைவாலியை பயிரிடலாம் வேளாண் விஞ்ஞானிகள் தகவல்</u>

காரைக்குடி, : குறுகியகால பயிரான குதிரைவாலியை மானாவாரி கேற்ற மாற்றுப்பயிராக பயிரிடலாம் என செட்டிநாடு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது: குதிரைவாலி பயிர் நமது முன்னோர்களால் பாரம்பரியமாக பயிரிடப்பட்டு வந்தது. இப்பயிர் மாறி வரும் பருவ நிலைக்கு மிகவும் ஏற்றது. குதிரைவாலி கோ(கேவி) 2என்ற ரகம் மானாவாரிக்கு மிகவும் உகந்தது. ஒரு ஏக்கர் விதைப்பதற்கு 4 கிலோ விதை தேவைப்படும். இதை வரிசைக்கு வரிசை 22.5 செமீ மற்றும் பயிருக்குப்பயிர் 10 செமீ இடைவெளியிலும் விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 2000 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மக்கிய தென்னை நார்கழிவு இட வேண்டும். தவிர அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபோக்டீரியா ஏக்கருக்கு 20 கிலோ தொழுவுரமாக அல்லது மணலுடன் கலந்து அடியுரமாக இடவேண்டும். இப்பயிருக்கு பொதுவாக ஏக்கருக்கு 40 கிலோ யூரியா மற்றும் 56 கிலோ சூப்பர் இடலாம். டிஏபியாக இட்டால் ஏக்கருக்கு 20 கிலோ, டிஏபி மற்றும் 30 கிலோ யூரியா இட வேண்டும். செம்மண் நிலத்திற்கு துத்தநாகம் 10 கிலோ, மற்றும் போரான் 1 கிலோ நுண்ணூட்டச்சத்தும், கரிசல் மண்ணில் 10 கிலோ இரும்பு சல்பேட் 150 கிலோ தொழுஉரத்துடன் கலந்து அடியுரமாக இடவேண்டும். விதைத்த 20 நாள் மற்றும் 40 நாட்களில்

களை எடுக்க வேண்டும். சராசரியாக ஏக்கருக்கு 800 கிலோ அறுவடை செய்யலாம். மற்ற தானியங்களை காட்டிலும் குதிரைவாலியில் நுண்ணூட்டச்சத்து அதிகம். நோய்கள் பெரியஅளவில் மகசூல் இழப்பை தருவதில்லை. அதனால் மானாவாரியில் குதிரைவாலியை பயிரிட்டு குறைந்த நாளில் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>இவரை நாடு அறியவேண்டும்</u>**




பொதுவாக தனி ஒரு மனிதனால் எந்தவொரு செயலிலும் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்க முடியாது, ஊர்கூடி இழுத்தால்தான் தேர் நகரும் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால், அதையெல்லாம் மீறி தனி ஒரு மனிதன் நினைத்து உத்வேகத்தால் செயல்பட்டால், எந்தவொரு மாற்றத்தையும் செய்ய முடியும் என்பதை நிரூபித்த ஒரு சாமானியன், குக்கிராமவாசி இன்று மத்திய அரசாங்கத்தின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருதை பெறப்போகிறார். இந்த ஆண்டு இந்த பத்ம விருது பெற்றவர் களில் பலர் நிச்சயமாக அவர்களின் சேவைக்காக போற்றப்பட வேண்டியவர்கள். அதேநேரத்தில் சாமானியர்களும் அவர்களின் உன்னத சேவையால் இந்த உயரிய விருதை பெறமுடியும் என்ற வகையில், எங்கோ நாட்டின் மூலையில் உள்ள ஒரு சமூகசேவகரின் செயலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் அன் சங் ஹீரோ என்பார்கள். அதாவது சிலரின் உயர்ந்த சேவைகள் உலகுக்கே தெரியாதவகையில்,

அந்த மாமனிதர்களின் தியாகங்கள் அங்கீகரிக்கப்படாமல் இருக்கும். அப்படி ஒருவரை தேடிப்பிடித்து, இந்த ஆண்டு பத்மஸ்ரீ விருதை மத்திய அரசாங்கம் வழங்கியுள்ளது பாராட்டுக்குரியது. பத்மஸ்ரீ பட்டியலில் 36–வது எண்ணில் இருந்த காட்சிக்கு எளியவரான ஒரு பாமர மனிதர் இந்தியாவின் முதல் குடிமகனான ஜனாதிபதியின் பொற்கரங்களினால் பத்மஸ்ரீ பட்டத்தை பெறப்போகிறார். யார் இந்த அருமனிதர்? என்பதை நாடு அறிந்தால்தான் அவரை மற்றவர்களும் பின்பற்ற முடியும். அவர் பெயர் ஜாதவ் மோலை பெயங். இந்தியாவின் வனமனிதர் என்று அழைக்கப்படுபவர். அசாம் மாநிலத்தில் உள்ள ஜோர்ஹாத் மாவட்டத்தைச் சேர்ந்த மோலை கதோனி என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். 1979–ம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு பெருவெள்ளம் அந்த கிராமத்தையும், அதன்பக்கத்தில் உள்ள ஊர்களையும் அழித்துவிட்டது. அந்தநேரத்தில் அரசாங்கம் அந்த ஊரின் அருகில் உள்ள சந்த்பார் என்ற தரிசு பகுதியில் மரம் நடும் பணிகளில் பெயங்கையும் மற்றும் சில தொழிலாளர்களையும் ஈடுபடுத்தியது. மற்றவர்களெல்லாம் ஏதோ வேலை செய்தோம், கூலி கிடைத்தது என்று போய்விட்ட நிலையில், ஜாதவ் பெயங் மட்டும் அந்த பகுதியில் உள்ள ஏறத்தாழ 1,400 ஏக்கர் தரிசு நிலத்தையும் அடர்ந்த காடாக ஆக்குவேன் என்று உறுதிபூண்டு, முதலில் மூங்கில் மரக்கன்றுகளை நடத்தொடங்கி, தொடர்ந்து அனைத்து மரக்கன்றுகளையும் தனி ஆளாக நடத்தொடங்கினார். தன் பிழைப்புக்காக பசுமாடுகள், எருமைகளை வளர்த்து, அதன் பாலை வைத்து பிழைப்பு நடத்துகிறார். ஏழ்மை அவர் லட்சியத்துக்கு குறுக்கே நிற்கவில்லை. 1979–ம் ஆண்டு தொடங்கிய அவரது முயற்சியால், இன்று அந்தப்பகுதி அடர்ந்த காடாகிவிட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்களைக்கொண்ட இந்த காடு இப்போது காண்டாமிருகங்கள், சிறுத்தைகள், யானைகள், முயல்கள், குரங்குகள், பறவைகள், பாம்புகள், கழுகுகள், மான்கள், காட்டுப்பன்றிகள், மாடுகள் என ஏராளமான மிருகங்கள், பறவைகளுக்கு வாழ்விடமாக ஆகிவிட்டது. ‘கிராமங்களில்

நல்ல மாடு உள்ளூரில் விலை போகாது' என்பார்கள். அதுபோல, இவரது அரும்பெரும் முயற்சியைக்கண்டு முதலில் 2012–ம் ஆண்டு பாரீசில் நடந்த உலக வெப்பமயமாதல் மாநாட்டில்தான் அவரை அழைத்து கவுரவப்படுத்தினார்கள். அதன்பிறகுதான் இவரை இந்தியாவில் அடையாளம் கண்டுகொண்டார்கள். தனி ஒரு மனிதன் என்றாலும், அவன் நினைத்தால் எந்த லட்சியத்தையும் நிறைவேற்றமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் பெயங் முயற்சியையும், வாழ்க்கையையும் இந்தியா முழுவதும் அறியச்செய்து, எல்லா இடங்களிலும் இதுபோல காடுகளை மக்கள் உருவாக்க மத்திய– மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கலாமே!

## <u>எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 245 குவிண்டால் பருத்தி ரூ.9½ லட்சத்திற்கு விற்பனை</u>



பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்திய பருத்திக் கழகத்தின் மூலம் ஏலமுறையில் பருத்தி விற்பனை நடைபெற்றது. இந்த மறைமுக ஏல விற்பனைக்காக 44 விவசாயிகள் தாங்கள் விளைவித்த 245 குவிண்டால் எடை கொண்ட 695 மூட்டை பருத்தியை கொண்டு வந்தனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த 6 வியாபாரிகள் ஒவ்வொரு விவசாயியின் மூட்டையாக பருத்தியின் தரத்தை சோதித்து அதற்கான தங்களது விலையை அலுவலர்களிடம் அளித்தனர். அதிக விலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, விவசாயியின் அனுமதியுடன் பருத்தி விற்பனை செய்யப்பட்டது. இந்த பருத்தி ஏலமுறை விற்பனையை கலெக்டர் தரேஸ் அஹமது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர்

கூறும்போது, இந்த ஏலத்தில் 245 குவிண்டால் பருத்தியானது மொத்தம் ரூ.9 லட்சத்து 30 ஆயிரத்துக்கு விற்பனையானது என்று தெரிவித்தார்.

## முருங்கைக்காய் விலை வீழ்ச்சி; கிலோ ரூ.3–க்கு விற்பனை



திசையன்விளை, திசையன்விளை பகுதியில் முருங்கைக்காய் விலை வீழ்ச்சியால், கிலோ ரூ.3–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

### முருங்கை விவசாயம்

நெல்லை மாவட்டம் திசையன்விளை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கை பயிரிடப் பட்டுள்ளது. சென்ற ஆண்டு முருங்கைக்காய்க்கு நல்ல விலை இருந்தது. அதிகபட்சமாக கிலோ ரூ.48 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனால் முருங்கை விவசாயிகள் நல்ல வருவாய் அடைந்தனர். அதுபோல் இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்து விவசாயிகள் கூடுதலாக முருங்கைகளை பயிரிட்டனர். இங்கு பயிரிடப்பட்டுள்ள குரூஸ், அழகி, செடி முருங்கைக்காய் ரகங்கள் வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு காய் வரத்து அதிகமாக உள்ளது. மேலும் சமீபத்தில் பெய்த கோடை மழை மற்றும் பனி காரணமாக காய்கள் நிறம் மாறியுள்ளது. இதனால் ஏற்றுமதி நடைபெறவில்லை.

### கிலோ ரூ.3

இப்போது திசையன்விளை முருங்கைக்காய் மார்க்கெட்டில் விவசாயிகளிடம் முருங்கைக்காய் கிலோ ரூ.3 முதல் ரூ.4 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த விலை பறி கூலிக்கு கூட கிடையாது என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பலர் முருங்கை

காய்களை பறிப்பதை நிறுத்தி விட்டனர். சில விவசாயிகள் முருங்கைக்காய்களை தங்களுக்கு சொந்தமான ஆடு, மாடுகளுக்கு இறையாக பறித்து போடுகிறார்கள். இதுபற்றி இலக்கரிவிளை முருங்கை விவசாயி தனசேகரனிடம் கேட்டபோது, நான் எங்களுக்கு சொந்தமான பம்புசெட் தோட்டத்தில் 20 ஏக்கர் நிலத்தில் 2 ஆயிரம் முருங்கைகள் பயிரிட்டுள்ளேன். சென்ற ஆண்டு அதிகபட்சமாக கிலோ ரூ.48 வரை விலை கிடைத்தது. கடந்த ஆண்டு விலையை நம்பி இந்த ஆண்டு கூடுதலாக பயிரிட்டேன். இப்போது விலை மிகவும் குறைவாக உள்ளது. சில நேரங்களில் லாரி வாடகையை கையில் இருந்து கொடுக்க வேண்டியுள்ளது என்றார்.